1992 ஏப்ரல் 1]

417—

சீட்டு நிறுவன விதிகளைக் கடுமையாக்குதல்.

*2462—டாக்டர் ஜி. ஆர். மாலா :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா?

சில சீட்டு நிறுவனங்கள் மக்களிடம் தொகையை வசூலித்து விட்டு, திருப்பித் தராததால் சீட்டு நிறுவனங்கள் நடத்துவதற்கு விதிகள் இன்னும் கடுமையாக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீட்டு நிறுவனங்கள் சீட்டு நடத்தும்போது, பதிவு செய்யப்பட்ட சீட்டு குருப்பாக இருந்து மக்களிடம் வசூலிக்கப் பட்ட தொகையினைத் திருப்பித்தராமல் இருக்கும் நிலை ஏற்படின் மையச் சீட்டு நிதிச் சட்டம், 1982 பிரிவு 64-ன் கீழ் சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளர்கள் சீட்டு நிதிகள் வழக்குகள் குறித்து நடுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளதால் நடுவர் மன்றத் தில் வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் தேடிக்கொள்ள தற்போது போதுமான அளவு விதிகள் உள்ளன.

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றாடக் கூலி பெறும் தொழிலாளி முதல் ஏ.சி. அறையில் பணி புரியும் அதிகாரிகள், செல்வந்தர்கள் வரை அனைவரையும் ஈர்க்கும் சீட்டு நிறுவனங்களில் சில நிறுவனங்களின் மோசடியையும், பகற் கொள்ளையையும் தடுப்பதற்கு தற்போ துள்ள விதிகளைக் கடுமையாக்கி, அதைச் செயற்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற சட்டத் திலே நிரம்ப விதிகள் இருக்கின்றன. குறிப்பாக 'விஜிலன்ஸ் செல்' என்று ஒரு செல்லை அமைத்திருக்கிறோம். பல சீட்டு கம்பெனிகள் ரிஜிஸ்டர் செய்யாமல் நடத்தப்படுகின்ற காரணத் தாலேதான் இந்த முறைகேடுகள் எல்லாம் வருகின்றன. ஆக அப்படி சட்டத்தின் கீழ் பதிவு செய்யாத சீட்டுக் கம்பெனிகளை எல்லாம் ஆய்ந்து, தவறுகளைக் கண்டுபிடிக்க முயற்சி எடுத்து வருகிறோம். குறிப்பாக அண்மைக் காலத்திலே கூட 70 சீட்டுக் கம்பெனிகள் ரிஜிஸ்டர் செய்யாமல் 2 கோடியே 15 இலட்சம் ரூபாய் அளவுக்கு சீட்டுகள் நடத்திக் கொண்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டு அந்தச் சீட்டுக் கம்பெனிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் பாதிக்கப்பட்டவர்

[1992 ஏப்ரல் 1

கள் பதிவாளரிடத்திலே விண்ணப்பங்கள் அல்லது பிராதுகள் கொடுக்கின்ற நேரத்திலே அது கவனிக்கப்பட்டு, ஏறத்தாழ 150 சீட்டு நடத்தும் தனி நபர்கள் மீது நடவடிக்கை எடுத்து, 7½ இலட்சம் ரூபாய் அளவுக்கு தவறு செய்தவர்கள் மீது அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகளைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர்களும் பதிலைச் சுருக்கமாகச் சொன்னால் நன்றாக இருக்கும்.

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில ஏலச் சீட்டு நிறுவனங்கள் அரசிடம் உரிமம் பெற்று ஒன்று அல்லது இரண்டு சீட்டுகளுக்கு மட்டும் டெப்பாசிட் செய்துவிட்டு, உதாரணமாக 5,000 ரூபாய், 10,000 ரூபாய் என்று இரண்டு சீட்டுகளுக்கு டெபாசிட் செய்து விட்டு, பல பிரிவுகளாக, பல கோடி ரூபாய்களுக்கு சீட்டுகள் நடத்தி, மோசடி செய்வது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ? ஆமெனில் இதுநாள் வரை எத்தனை சீட்டுக் கம்பெனிகள் இந்தக் குற்றத்தின் கீழ் கண்டு பிடிக்கப்பட்டு, தண்டிக்கப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்தனை கம்பெனிகள் மீது நடவடிக்கை எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைபோல ஏதாவது குறிப்பிட்ட நிறுவனங்கள் தவறு செய்து, அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய வகையிலே நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆசைமணி.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீட்டுகள் ஆரம்பிக்கும் நேரத்தில் ஒரு லட்சம் ரூபாய் சீட்டு என்றால் ஒரு லட்சம் ரூபாய் டெபாசிட் செய்தால் போதும் என்று சொல்லுகிறார்கள். முதல் 2 மாதம் ஏலம் கிடையாது என்று சொல்லி, 2 இலட்சம் ரூபாயையும் வசூல் செய்து விடுகிறார்கள். எனவே டெபாசிட் தொகையை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற குறைபாடுகளைக் கண்காணித்து, அதைத் தீர்ப்பதற்காகத்தான் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் ரெஜிஸ்டிரேஷன் துறையிலே இருக்கும் ஒரு

மாவட்டப். பதிவாளரே இதற்காக எக்ஸ்குளுசிவ்வாகப் போடப்பட்டிருக்கிறார். இந்தக் குறைகளை எல்லாம் அவரிடம் சொன்னால் நிச்சயமாகத் தீர்த்து வைக்கப்படும்.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. சுவாமிநாதன்.

திரு. சி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஏதாவது குறிப்பிட்ட நிறுவனங்களைப் பற்றி நேரடியாக விபரம் தெரிந்தால் அதைச் சொல்லுங்கள் என்றார்கள். ஸ்ரீ ஜெயசக்தி சிட்பண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் பாலு என்பவரால் நடத்தப்பட்டு, ஏறக்குறைய 40—50 கோடி ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டும்கூட, இன்றைக்கு அவர் மீது எந்த வழக்கும் தொடர முடியாமல், அவர் உல்லாசமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட கொள்ளைக் கும்பலை தடுத்து நிறுத்தி முறையாக வழக்குத் தொடர்ந்து தண்டனை பெற்றுத்தர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை மனதிலே கொண்டு உரிய நடவடிக்கையை துரிதமாக அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 377, திரு. என். பன்னீர்செல்வம்- மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

377—

திரையரங்குகளில் பெரிப்பரல் பகுதி தூரத்தைக் குறைத்தல்.

*3975 —திரு. என். பன்னீர்செல்வம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திரையரங்குகளில் பெரிப்பரல் பகுதி தூரத்தை, 5 கிலோ மீட்டரிலிருந்து 1 கிலோ மீட்டர் என்று ஆக்கப்படுமா ?

(ஆ) பெரிப்பரல் பகுதியிலுள்ள திரையரங்குகளில் புதுப் படங்கள் திரையிடும் தியேட்டர்களுக்கு மட்டும் 40 சதவீதம் வரி என்றும் மற்ற தியேட்டர்களுக்கு ஒட்டுமொத்த வரி ன்றும் மாற்றப்படுமா ?